# நமது தின கனி
காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 109 | 4 Pages | 22.11.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 109 | 4 பக்கங்கள் | 22.11.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## காவிரி நீர் ஒழுங்காற்று குழு கூட்டம் 23ம் தேதி கூடுகிறது: 4 மாநில அதிகாரிகளுக்கு அழைப்பு



புதுடெல்லி, நவ.22

சுப்ரீம் கோர்ட் உத்தரவின் பேரில் காவிரி நதி நீரை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து கொள்வதற்காக காவிரி மேலாண்மை ஆணையத்தையும், ஒழுங்காற்று குழுவையும் மத்திய அரசு அமைத்தது.

இந்த இரு அமைப்புகளுக்கும் தமிழகம், கர்நாடகம், கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களும் தங்கள் பிரதிநிதிகளை நியமித்துள்ளன.

இந்நிலையில், நாளை மறுதினம் 90வது காவிரி நீர் ஒழுங்காற்று குழு கூட்டம் நடைபெறவுள்ளது. காணொலி வாயிலாக நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ம் தேதி நடைபெற்ற காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் 23ம் தேதி வரை தமிழகத்திற்கு வினாடிக்கு 2,600 கன அடி வீதம் தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

நாளை மறுதினம் நடக்கும் கூட்டத்தில் ஆணையத்தின் உத்தரவுபடி கர்நாடக மாநிலம் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துள்ளதா என்பது பற்றி கணக்கீடு செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

## பள்ளி பாடப் புத்தகங்களில் ராமரின் வரலாறு: என்சிஇஆர்டி பரிந்துரை

புதுடெல்லி, நவ.2


உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் வரும் ஜனவரி 22ம் தேதி ராமர் கோவில் திறக்கப்பட உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

இந்நிலையில், வரலாற்றுப்பாடப்புத்தகங்களில்செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள என்.சி.இ.ஆர்.டி. சமூக அறிவியல் நிபுணர் குழு, கடவுள் ராமர் பற்றிய பாடங்களை இடம்பெறச் செய்யலாம் என்ற பரிந்துரையை வழங்கி இருப்பதாக தெரிகிறது.

சங்க கால இந்தியா என்ற பிரிவில் ராமாயணம், ராமர் அயோத்தியை ஆட்சிசெய்தவிதம், வனவாசம்உள்ளிட்டவைஇடம்பெறும்வகையிலான பரிந்துரை வழங்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

இதனைஅரசுஏற்கும்பட்சத்தில், விரைவில்பள்ளிபாடப்புத்தகங்களிலும் கடவுள் ராமர் குறித்த வரலாறு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கொல்கத்தா காளி கோவிலை புதுப்பிக்கும் பணியில் ரிலையன்ஸ் நிறுவனம்



கொல்கத்தா, நவ.22

மேற்கு வங்காள மாநிலத்தின் கொல்கத்தாவில் சர்வதேச வர்த்தக மாநாடு நடைபெற்றது. இதில் 25க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பல்வேறு நிறுவன பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் முதல் மந்திரி மம்தா பானர்ஜி, இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்நிலையில், இந்த மாநாட்டில்ரிலையன்ஸ்நிறுவனதலைவர்முகேஷ் அம்பானி கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:


மேற்கு வங்காள மாநிலத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்த ரிலையன்ஸ் முடிவு செய்துள்ளது. ரிலையன்ஸ் நிறுவனம் மேற்கு வங்காளத்தில் சுமார் 45,000 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. மாநிலத்தில் அடுத்த 3 ஆண்டுகளில் கூடுதலாக ரூ.20,000 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

ரிலையன்ஸ் அறக்கட்டளை கொல்கத்தாவில் உள்ள காளிகாட் கோவிலை புதுப்பிக்கும் ஒரு லட்சிய திட்டத்தை எடுத்துள்ளது. பல நூற்றாண்டுகள் பழமையான பாரம்பரிய கட்டமைப்புகள் உள்பட முழு கோவில் வளாகத்தையும் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

## பதஞ்சலி நிறுவனத்துக்கு எச்சரிக்கை விடுத்த சுப்ரீம் கோர்ட்: காரணம் என்ன?

புதுடெல்லி, நவ.22

ஆயுர்வேத பல்பொடி, சோப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை பதஞ்சலி நிறுவனம் தயாரித்து விற்பனை செய்கிறது. நவீன மருந்துகளுக்கு எதிராக பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனம் விளம்பரம் செய்து வந்தது.




இதற்கிடையே, பதஞ்சலி நிறுவனத்தின் தவறான விளம்பரங்கள் குறித்து இந்திய மருத்துவ சங்கம் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. அந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில், அலோபதி மருந்துகளை குறிவைத்து தவறான விளம்பரங்களைவெளியிட்டதற்காகபதஞ்சலிஆயுர்வேதநிறுவனத்திற்கு சுப்ரீம் கோர்ட் இன்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் அமானுல்லா மற்றும் பிரசாந்த் குமார் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, பதஞ்சலி நிறுவனத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பதஞ்சலிஆயுர்வேதநிறுவனத்தின்இதுபோன்றதவறானவிளம்பரங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்தகைய மீறலை சுப்ரீம் கோர்ட் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளும்.

தவறான விளம்பரங்கள் நீடித்தால் ரூ.1 கோடி அபராதம் விதிக்கப்படும். இந்த அபராதம் ஒவ்வொரு தயாரிப்புக்கும் பொருந்தும் என எச்சரிக்கை விடுத்துள்ள சுப்ரீம் கோர்ட், எதிர்காலத்தில் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடுவதை பதஞ்சலி நிறுவனம் உறுதிசெய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

# சுப்ரீம் கோர்ட் மூலம் விரைவில் நல்ல செய்தி வரும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.22

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா சென்னை கலைவாணர் அரங்கில் இன்று காலை நடைபெற்றது.

இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தரானமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் மாணவமாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

இங்கு டாக்டர் பட்டம் பெற்ற பாடகி சுசீலாவின் குரலில் மயங்காதவர்களே நிச்சயமாக இருக்க முடியாது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் இப்படிப்பட்ட புகழை பெற்ற பாடகி அவர்.

அதே போல் இசையில் அறிஞர் பி.எம்.சுந்தரம் பன்முக திறமை கொண்டவர். மிகப்பெரிய இசைமரபில் பிறந்து இசைத் துறைக்கு அரிய தொண்டாற்றி வருபவர்.

மங்கல இசை மன்னர்கள் மரபு தந்த மாணிக்கங்கள்போன்ற இசைத் துறையில் முக்கியமான நூல்களை படைத்தவர். எல்லாவற்றுக்கும் மேல்கலைஞர்மனதில் இடம்பிடித்தவர்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால் எங்கள் தஞ்சை மன்னை சார்ந்தவர்.




மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசோட முதலமைச்சரான நான் இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருக்கிறதால்தான் மக்கள் எண்ணற்ற பிரதிபலிக்கிற வகையிலான இது போன்ற முடிவுகள் எடுக்க முடிகிறது.

அதனால்தான் அனைத்து பல்கலைக்கழகங்களின் வேந்தராகவும் முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று நாம் சொல்கிறோம்.

அதற்காக சட்ட முன் வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறோம்.

இது தொடர்பான சர்ச்சைக்குள் நான்போக விரும்பவில்லை. சுப்ரீம் கோர்ட்டு இது தொடர்பான வழக்கை விசாரித்துக் கொண்டு வருகிறது. நல்ல செய்தி வரும் என்று எதிர் பார்ப்போம். வர வேண்டும் என்று எதிர் பார்ப்போம்.

செய்திகளில் பார்த்திருப்பீர்கள், நாளிதழில் படித்திருப்பீர்கள். மாநில அரசின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற வகையில், நேற்றைய தினம், நீதிபதிகள் கருத்துக்களை அதில் சொல்லி இருக்கிறார்கள். ஒத்திசைவு பட்டியலில் இருப்பதை கல்வி மானிய பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

இப்படி மாற்றினால்தான் எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் உயர்கல்வி என்ற இலக்கை மாநிலங்கள் எட்ட முடியும். நான் தமிழ்நாட்டிற்காக மட்டும் இப்படி சொல்லவில்லை. இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களை சேர்த்துதான் சொல்கிறேன். நான் அடிக்கடி சொல்வது போல கல்விதான் ஒருவருடைய நியாயமான சொத்து. அந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு எந்த தடையும் இருக்க கூடாது என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை. இந்த தருணத்தில் 2 அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கான அரசு மானியம் ரூ. 3 கோடியாக உயர்த்தி அடுத்த நிதி ஆண்டில் இருந்து வழங்கப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையம், நூலகம் மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்பு முறை அமைக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மேல்மா சிப்காட் விவகாரம்: விவசாயிகள் மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் ரத்து செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், நவ.22

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு மேல்மா சிப்காட் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்டம் உள்பட அனைத்து வழக்குகளையும் ரத்து செய்து அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்,

மேல்மாசிப்காட் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டம் 2023 கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று தஞ்சை கலெக்டர் அலுவலகம் முன்பு தஞ்சாவூர் மாவட்ட அனைத்து விவசாயிகள் போராட்டக்குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதற்காக அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் மணி தலைமையில் மாநில தலைவர் பழனியப்பன், விவசாய சங்க நிர்வாகிகள் சுந்தர விமல்நாதன் உள்பட ஏராளமான விவசாயிகள் பேரணியாக கலெக்டர் அலுவலகம் நோக்கி வந்தனர்.

பின்னர் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் வரும் 29ம் தேதி சென்னையில் அனைத்து விவசாயிகளும் ஒன்று திரண்டு மாபெரும் முற்றுகை போராட்டம் நடத்துவோம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர். ஆர்ப்பாட்டத்தையொட்டி கலெக்டர் அலுவலகம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# நீர்நிலைகளை ஆக்கிரமித்து உள்ளவர்களுக்கு பட்டா வழங்க உத்தரவிட முடியாது: மதுரை ஐகோர்ட்டு அதிரடி

மதுரை, நவ.22

மதுரையை சேர்ந்த பவுன்ராஜ் உயர்நீதிமன்றமதுரைஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

மதுரை விராட்டிபத்து பகுதியில் நத்தம் புறம்போக்கு இடத்தில் பல வருடங்களாக வசித்து வருவதாகவும், தற்போது அரசு அதிகாரிகள் அதனை நீர் நிலை ஆக்கிரமிப்பு என்று கூறி வீட்டை அகற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும் பொதுப்பணி துறையினர் ஆக்கிரமிப்பு அகற்ற நோட்டீஸ் வழங்கி உள்ளனர். இதற்கு தடை விதித்து நத்தம் புறம்போக்கு இடத்திற்கு எங்களுக்கு பட்டா வழங்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறியிருந்தார்.



இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் புகழேந்தி அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் மனுதாரர், புதுக்குளம் கண்மாய் நீர் நிலையை ஆக்கிரமித்து தற்காலிக செட் அமைத்து உள்ளார். அதற்கு பட்டா வேண்டும் என கூறுவது ஏற்கத்தக்கது அல்ல எனவாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து அதற்கு பட்டா வேண்டும் என கூறுவது ஏற்கதக்கதல்ல. மேலும் நீர்நிலைகளை ஆக்கிரமித்து உள்ளவர்களுக்கு பட்டா வழங்க வருவாய் துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது என கூறிய நீதிபதிகள் பட்டா வழங்கக்கூடிய மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேலும் அரசு ஆவணங்களின்படி, புதுக்குளம் மற்றும் பெரியகுளம் கண்மாய் பகுதிகளில் மனுதாரர் மட்டுமல்லாமல் மேலும் பலர் நீர்நிலைப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

எனவே பொதுப்பணித்துறையினர், வருவாய் துறையினர் இந்த ஆக்கிரமிப்புகளையும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு அகற்ற வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# கோவையில் ஃபுளூ வைரஸ் காய்ச்சல் பாதிப்பு: வெளியில் செல்லும் போது மாஸ்க் அணிய அறிவுறுத்தல்

கோவை, நவ.22

கோவையில் ஃபுளூ வைரஸ் பாதிப்பு அதிகரித்துள்ளதன் காரணமாக உள்நோயாளியாக சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கைஅதிகரித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் அரசு, தனியார் மருத்துவமனைகளில் சராசரியாக காய்ச்சல் பாதிப்புக்காக ஒரு நாளைக்கு உள்நோயாளியாக சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையானது 100ஐ கடந்துள்ளது.

காலநிலை மாற்றம், பண்டிகை காலத்தை முன்னிட்டு கூட்ட நெரிசல் அதிகம் உள்ள இடங்களுக்கு மக்கள் சென்று வந்தது ஆகியவை ஃபுளூ வைரஸ் பரவ காரணங்கள் ஆகும். குழந்தைகள், முதியவர்களுக்கு விரைவாக இந்த வைரஸ் பரவுகிறது.

சுவாசக் குழாய் மூலமாகத்தான் இந்த வைரஸ் உடலுக்குள் செல்கிறது. ஒருவர் இருமும் போதும், தும்மும் போதும் மற்றவருக்கு பரவுகிறது.

பொதுமக்கள் மருந்து கடைகளில் சுயமாக மருந்து வாங்கி உட்கொள்ளக் கூடாது. மருத்துவரின் ஆலோசனை பெற்றே மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், ஃபுளூ காய்ச்சல் பாதிப்பு எதிரொலியாக கோவையில் வெளியில் செல்லும் போது முக கவசம் அணிந்துகொள்ள வேண்டும். முடிந்தவரை கூட்டம் உள்ள இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த மீனவர்கள் 5 பேர் கைது



ராமநாதபுரம், நவ.22

இந்திய கடல் பகுதிக்குள் பயங்கரவாதிகள் அத்துமீறி நுழைவதை தடுக்கவும், கடத்தல் சம்பவங்களை தடுக்கவும் கடலோர காவல்படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி கடலோர காவல் படையினர் ரோந்து கப்பலில் சென்று கண்காணித்து வருகின்றனர்.

இந்தநிலையில்ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி அருகே இந்திய எல்லைக்குள் ஒரு இலங்கை படகு அத்துமீறி நுழைந்து இருப்பது தெரியவந்தது. இதையடுத்து கடலோர காவல்படையினர் விரைந்து சென்று அந்த படகை சுற்றி வளைத்தனர். அந்த படகில் இலங்கையை சேர்ந்த 5 மீனவர்கள் இருந்தனர். இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாக அவர்கள் 5 பேரையும் கடலோர காவல்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடம் எல்லை தாண்டி மீன் பிடிக்க வந்தார்களா அல்லது கடத்தல் பொருள்கொண்டு வந்தார்களா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகின்றது.

# வரும் 26ம் தேதி மாவட்ட செயலாளர்கள் கூட்டம்: தி.மு.க. அறிவிப்பு




சென்னை, நவ.22

தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. தலைவர்மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள்கூட்டம் வருகிற 26ம் தேதி காலை 10.30 மணியளவில் தி.நகரில் உள்ள அகார்ட் ஓட்டலில் நடைபெறும்.

அப்போது மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாடு மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள், உறுப்பினர்களின் பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 150 வியாபாரிகளை அழைத்து போலீசார் எச்சரிக்கை "குண்டர் சட்டம் பாயும்



ராயபுரம், நவ.22

கடைகளில் குட்கா, புகையிலை பொருட்கள் விற்பனைக்கு தடை உள்ளது. எனினும் தடையை மீறி புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

அவர்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்தாலும் புகையிலை விற்பனை தொடர்ந்து நீடித்து வருகிறது. மேலும் பள்ளி, கல்லூரி அருகில் உள்ள கடைகளிலும் குட்கா பொருட்கள் விற்கப்படுவதால் மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் சூழல் ஏற்பட்டு உள்ளது. இதனை தடுக்க அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வடசென்னைபகுதியில் குட்கா, புகையிலை விற்பனை தடையை மீறி அதிகஅளவில் நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் புது வண்ணாரப் பேட்டை போலீஸ் நிலைய வளாகத்தில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் வியாபாரிகளுக்கு போதை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் உத்தரவின் படி வண்ணாரப் பேட்டை போலீஸ் துணை கமிஷனர் சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர், புது வண்ணாரப்பேட்டை, ராயபுரம், காசிமேடு, தண்டையார்பேட்டை போன்ற பகுதியை சேர்ந்த பெட்டிக்கடை, டீக்கடை, பழ வியாபாரிகள் என மொத்தம் 150 பேர் கலந்து கொண்டனர்.

அப்போது போலீசார் பேசும்போது, கடைகளில் தடைசெய்யப்பட்ட குட்கா, புகையிலை மற்றும் போதை பொருட்களை விற்பனை செய்யக் கூடாது.தடையை மீறி விற்பனைசெய்தால்வங்கி கணக்குகள் முடக்கப்பட்டு, மாநகராட்சி மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து கடை நிரந்தரமாக மூடி சீல் வைக்கப்படும். மேலும் கைது நடவடிக்கை எடுக்கப் படும்.

பள்ளி, கல்லூரிகள், மற்றும் பொது மக்களுக்கு போலீசாரின் உதவி செல்போன் எண்கள் ஆங்காங்கே வைக்கப்படும். ஏற்கனவே போதைப் பொருட்கள் விற்பனை செய்தவர்கள் மீண்டும் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் வேறு தொழில் செய்யவும் அல்லது வியா பாரம் செய்ய உதவி தேவைப்பட்டால் போலீசார் சார்பில் உதவி செய்து தரப்படும் என்று தெரி வித்தனர்.

பின்னர்போலீஸ்துணை கமிஷனர் சக்திவேல் நிருபர்களிடம் கூறும்போது, வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தில் உள்ள பெட்டிக்கடை, டீக்கடை, பழக்கடை போன்ற கடைகளில்கஞ்சா,மாவா, குட்கா போன்ற பொருட்களை விற்பனை செய்தவர்கள் மீது இதுவரை 42 வழக்குகள் போடப்பட்டுள்ளது. அதில் 51 பேர் கைதாகி உள்ளனர்.

இதில் 16 பேரின் வங்கி கணக்குகள் உள்ளிட்ட மொத்தம் ரூ. 25 லட்சம் பணம் முடக்கப்பட்டுள்ளது. தடையை மீறி போதைப் பொருட்கள் விற்பனை செய்தால் கைது நடவடிக்கை யை தொடர்ந்து குண்டர் சட்டம் பாயும் என்றார்.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவுக்கு 2700 சிறப்பு பேருந்துகள் இயக்கம்: அமைச்சர் தகவல்



சென்னை, நவ.22

தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் கார்த்திகை தீபத் திருநாள் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணிக்கு நடைபெறவுள்ளதை முன்னிட்டும். 27/11/2023அன்றுபௌர்ணமி கிரிவலத்தை முன்னிட்டும். 25/11/2023 சனிக்கிழமை முதல் 27/11/2023 வரை அனைத்து பக்தர்கள் மற்றும் பொது மக்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக சிறப்பு பேருந்துகள்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி, சென்னையிலிருந்தும்.

தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்கள் மற்றும் அண்டை மாநிலங்களான பெங்களூரு, புதுச்சேரி ஆகிய இடங்களில் இருந்தும் மேற்கண்ட நாட்களில் 2700 சிறப்பு பேருந்துகள் மூலம் 6947 நடைகள் பக்தர்கள் வசதிக்காக இயக்கப்பட உள்ளது. மேலும், திருவண்ணாமலை நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள 9 தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து பக்தர்கள் கிரிவலப் பாதை சென்று திரும்பி வருவதற்கு வசதியாக 40 சிற்றுந்துகள் பயணிகள் கட்டணமில்லா சிற்றுந்துகளாக இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயணிகள்தங்களின்பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு பயணம் செய்ய ஏதுவாக https://www.tnstc.in என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் பேருந்துகள் புறப்படும் இடங்கள் ஆகிய விவரம்.

வ.எண் தற்காலிக பேருந்து நிலையம் (திருவண்ணாமலை) மார்க்கம்

1 வேலூர் ரோடு Anna Arch போளூர், வேலூர், ஆரணி, ஆற்காடு. செய்யாறு

2 அவரலூர்பேட்டை ரோடு – SRGOS பள்ளி எதிரில் சேத்துப்பட்டு, வந்தவாசி. காஞ்சிபுரம்

3 திண்டிவனம் ரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்செஞ்சி, திண்டிவனம். புதுச்சேரி, தாம்பரம், அடையாறு, கோயம்பேடு

4 வேட்டவலம் ரோடு சர்வேயர் நகர்வேட்டவலம், விழுப்புரம்

5 திருக்கோயிலூர் ரோடு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில், அருணை மருத்துவக் கல்லூரி அருகில் மற்றும் வெற்றி நகர் திருக்கோயிலூர். பண்ருட்டி.கடலூர், சிதம்பரம், கும்பகோணம், திட்டக்குடி, விருத்தாச்சலம், நாகப்பட்டினம், திருச்சி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி

6 & 7 மணலூர்பேட்டை ரோடு செந்தமிழ் நகர்மணலூர்பேட்டை. கள்ளக்குறிச்சி. தானிப்பாடி. சாத்தனூர் அணை

8 செங்கம் ரோடு அத்தியந்தல் மற்றும் சுபிக்ஷா கார்டன்செ ங்கம். தருமபுரி, திருப்பத்தூர், சேலம். பெங்களூரு, ஓசூர், ஈரோடு, கோயம்புத்தூர்

9 காஞ்சி ரோடு டான் பாஸ்கோ பள்ளி காஞ்சி. மேல்சோழங்குப்பம்

மேலும் பயணிகள் கூட்டம் குறையும் வரை தேவைக்கு ஏற்ப பேருந்துகளை இயக்கிடவும். பக்தர்களுக்கு எவ்விதமான அசௌகரியம் ஏற்படாமல் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர்களுக்கு தகுந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ரெயில்வே தண்டவாளத்தில் 10ம் வகுப்பு மாணவி மர்ம மரணம்: புத்தக பை வேறு இடத்தில் மீட்பு



ஜோலார்பேட்டை, நவ.23

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அடுத்த கார்த்திகேயபுரம் பகுதியைச் சேர்ந்த பாஸ்கர்மகள்பிரித்திங்கா ( வயது 15).

இவர் அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். நேற்று காலை வழக்கம் போல் மாணவி பள்ளிக்குசென்றார்.பள்ளியில் இருந்து மதியம் 1 மணி அளவில் வீட்டுக்கு செல்வதாக, சக மாணவிகளிடம் கூறிவிட்டு சென்றார்.

நேற்று மாலை நீண்ட நேரமாகியும் பிரித்திங்கா வீட்டுக்கு செல்லவில்லை. இதனால் அதிர்ச்சடைந்த அவரது பெற்றோர் அக்கம், பக்கம் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தேடினர் எங்கும் அவர் கிடைக்கவில்லை.

குருநாதபுரம் ரெயில் தண்டவாளம் அருகே மாணவியின் புத்தகப் பை மற்றும் செருப்பு உள்ளிட்டவை கிடந்தன.

இது குறித்து தகவல் அறிந்த மாணவியின் பெற்றோர், விரைந்து சென்று அவற்றை பறிமுதல் செய்து தேடி வந்தனர்.

மேலும் குடியாத்தம் டவுன் போலீசில், மகளை காணவில்லை என புகார் அளித்தனர்.

இந்த நிலையில் இன்று காலை குடியாத்தம் மேல்பட்டி ரெயில் நிலையங்களுக்கு இடையே மாணவி பிரித்திங்கா பள்ளி சீருடையில் ரெயிலில் அடிபட்டு மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இது குறித்து தகவல் அறிந்த ஜோலார்பேட்டை ரெயில்வே போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

மாணவியின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக குடியாத்தம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மாணவி ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 7 கோடி மோசடி செய்த புகார்: தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் உள்பட 5 பேரிடம் 2வது நாளாக விசாரணை

களக்காடு, நவ.22

கேரளாவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் ஒரு நிதி நிறுவனத்தின் கிளை நெல்லை மாவட்டம் களக்காடு அண்ணா சாலையில் உள்ளது. இங்கு மேலாளர் மற்றும் நிதி நிறுவன ஊழியர்களாக களக்காடு மற்றும் அதன்சுற்றுவட்டாரத்தை சேர்ந்தவர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

சமீபத்தில் இந்த நிதி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து வந்த அதிகாரிகள், களக்காடு கிளையில் கணக்கு விபரங்கள் மற்றும் நகை இருப்பு குறித்த ஆய்வு பணியை மேற்கொண்டனர். அப்போது அங்கு வாடிக்கையாளர்கள் அடகுவைத்தநகைகளை லாக்கரில்இருந்துஎடுத்து அதே போல் போலியாக நகைகளை தயாரித்து உள்ளே வைத்துவிட்டு ஒரிஜினல் தங்க நகைகளை நிதிநிறுவன ஊழியர்கள் எடுத்து கொண்டதும், அதனை வேறு ஒரு அடகு கடை நடத்திவரும் நபரின் மூலமாக விற்றதும் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் இவ்வாறாக சுமார் ரூ.7 1/4 கோடி வரையில் முறைகேடு நடந்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக தலைமை அலுவலக அதிகாரிகள், நெல்லை சரக டி.ஐ.ஜி. அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர். அவரது உத்தரவின் பேரில் நெல்லை மாவட்ட குற்றப்பிரிவுதுணைபோலீஸ் சூப்பிரண்டு தனுசியா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் இன்ஸ்பெக்டர் முத்து தலைமையிலான போலீசார் நேற்று களக்காட்டில் உள்ள நிதி நிறுவனத்தில் நேரடி விசாரணை மேற்கொண்டனர்.

இதில் அந்த நிதி நிறுவனத்தில் பணியாற்றி வரும் 2 ஊழியர்கள் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு தெரிந்த மற்றொரு அடகு கடை நடத்தி வரும் கணவன்மனைவி உள்பட மேலும் 3 பேரும் இதற்கு உடந்தையாக இருந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனால் தொடர்புடைய 5 பேரையும் நெல்லை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் வைத்து நேற்று நள்ளிரவு வரையிலும் போலீசார் விசாரணை நடத்திய நிலையில், இன்றும் 2வது நாளாக அவர்களிடம் போலீசார் துருவி துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே அவர்கள் தெரிவித்த தகவலின் பேரில் முக்கிய நபர் ஒருவரை போலீசார் பிடித்து வந்து நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பரிசோதனைக்கு அழைத்து சென்றபோது அந்த நபர் தப்பி ஓடி விட்டதாகவும், அவரை போலீசார் தேடி வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

# தலைமை ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம்



சென்னை, நவ.22

தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் இன்று நடந்தது.

1300 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களை பதவி இறக்கம் செய்யும் நடவடிக்கையை கைவிடக் கோரி மாநில தலைவர் அன்பரசன் தலைமையில் நடந்தது.

பொருளாளர் இளங்கோ, பொதுச் செயலாளர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தில் கலந்து கொள்ள தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தலைமை ஆசிரியர்கள் வந்து இருந்தனர். அவர்கள் அமர்வதற்காக சாமினா பந்தல் போடப்பட்டு இருந்தது.

ஆனால் காலையில் இருந்து மழை பெய்து கொண்டே இருந்தாலும் ஆசிரியர்கள் சோர்வடையாமல் பந்தலில் அமர்ந்தனர்.

பிரதான ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நனைந்து கொண்டும், குடை பிடித்தும் அமர்ந்து இருந்தனர்.

போராட்டம் குறித்து அன்பரசன் கூறியதாவது:

முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் இருந்து பதவி உயர்வு பெற்று சென்ற பணியிடங்களுக்கு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு பெற்று சென்றனர்.

1.1.2018க்கு பிறகு பணி புரிந்து வருகிற சுமார் 1300 உயர்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர்களை பதவி இறக்கம் செய்யப் போகும் நடவடிக்கையை கைவிட வேண்டும் என வலியுறுத்தி இப்போராட்டம் நடக்கிறது என்றார்.



திருப்பூர் கலெக்டர் கிறிஸ்துராஜ் உடனடிநடவடிக்கை மேற்கொண்டு திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கை மனுக்கள் மற்றும் சேவைகள் பெற வருகை தரும் பொழுது வயதானவர்கள் ஊனமுற்றோர்கள் மற்றும் உடல் நலம் குறியவாக உள்ளவர்கள் அமர்ந்து சேவைகளை பெற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் திடீர் போர்க்கொடி

சென்னை, நவ.22

தமிழகத்தில் காமராஜர் காலம் வரை கோலோச்சிய காங்கிரசுக்கு இப்போது ஊன்றுகோல் தேவைப்படுகிறது. சுய காலில் எழுந்து நிற்க வாய்ப்பு இருக்கிறதா? என்றால் கட்சியினருக்கே நம்பிக்கை இல்லை.

அதற்கு முக்கிய காரணம் பதவிகளை பெறுவதற்கு காட்டும் அக்கறை கட்சி வளர்ப்பில் காட்டுவதில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

எம்.பி., எம்.எல்.ஏ.க்களாக வருபவர்கள் கட்சி பணி, கட்சி செல்வாக்கு அடிப்படையில் வருவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட செல்வாக்கால் டெல்லியில் காய் நகர்த்தி வெற்றி பெற்று விடுகிறார்கள் என்ற பொருமல் கட்சிக்குள் எப்போதும் இருப்பதுதான்.

இது தேர்தல் தொடர்பான மாவட்ட தலைவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பகிரங்கமாகவே வெளிப்பட்டது.

தேர்தலை பற்றி பேசுகிறோம். எதற்காக? இருப்பவர்களே மீண்டும் எம்.பி.க்கள் ஆக வேண்டும் என்பதற்காகவா?

ஒவ்வொருவரும் தங்கள் செல்வாக்கால் தொடர்ந்து வாய்ப்பை பெற்று விடுகிறார்கள். அவர்கள் கட்சி வளர்ச்சிக்கு செய்தது என்ன? என்பதை பற்றி யோசிப்பது இல்லை. மெஜாரிட்டி சமூகம் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறீர்கள். வெற்றி பெற்ற பிறகு அவர்கள் செல்வாக்காலும், செய்த பணிகளாலும் அந்த சமூகத்தையாவது காங்கிரசுக்கு ஆதரவாக மாற்றி இருக்கிறார்களா? ஆனால் தேர்தலில் 'டிக்கெட்' மட்டும் உறுதியாகி விடுகிறது. மற்றவர்களெல்லாம் ரெயில் பயணம் மாதிரியே காத்திருக்க வேண்டியுள்ளது. உறுதியும் ஆகாது. ஆர்.ஏ.சி. கூட வராது என்ற நிலைதான்.

மாவட்ட தலைவர்கள் எவ்வளவு சிறப்பாக செயல்பட்டாலும் அவர்கள் பெயரை பரிசீலிப்பது கூட இல்லை. புதியவர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள். அப்படியானால்தான் நமக்கும் எதிர்காலம் இருக்கிறது என்றும் உற்சாகமாக உழைப்பாளர்கள் என்றும் சென்னை மாவட்ட தலைவர்கள் ரஞ்சன்குமார், முத்தழகன், திருவாரூர் மாவட்ட தலைவர் உள்ளிட்ட சிலர் தங்கள் பேச்சில் வெளிப்படுத்தினார்கள்.

எம்.பி.க்கள் தங்கள் தொகுதி நிதியை கூட கட்சி நிர்வாகிகள் கேட்கும் பணிகளுக்கு ஒதுக்குவதில்லை என்று குறை சொன்னார்கள்.

இதற்கிடையில் முன்னாள் தலைவர்களை அழைப்பதில்லை. முடிஞ்சு போன தலைவர்களாக கருதுகிறார்கள் என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் குற்றம் சாட்டினார்.

இதுபற்றி கட்சியின் மூத்த நிர்வாகிகளிடம் கேட்ட போது, கட்சிக்குள் இருக்கும் கோஷ்டிகள் இப்படித்தான் இருக்கும். தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஏற்கனவே ஒவ்வொரு கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்தும் கலந்து கொள்ளவில்லை. இதனால் கடந்த சில மாதங்களாக அழைப்பதில்லை. இப்படி இருக்கும் நிலையில் எப்போது கட்சி பிரச்சினையை தீர்ப்பது? ஆட்சியை எப்போது பிடிப்பது? என்று ஆதங்கப்பட்டனர்.

# மீனவர் தின வெள்ளி விழா நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி பங்கேற்பு



தூத்துக்குடி, நவ.22

மீனவர்களின் உழைப்பையும், தியாகத்தையும் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21ந்தேதி உலக மீனவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலக மீனவர் தினத்தை 1998ம் ஆண்டு ஐ.நா. சபை அங்கீகரித்தது. அந்த வகையில் இந்த ஆண்டு 25வது வெள்ளி விழாவாக கொண்டாடப்படுகிறது.

இதனை முன்னிட்டு தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பு, கடல்சார் மக்கள் நல சங்கமம் சார்பில் தூத்துக்குடி ஸ்நோ ஹாலில் மீனவர் தின விழா நடபெற்றது.

இதில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். இதற்காக அவர் சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று மதியம் தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையத்திற்கு வந்தார்.

அவரை மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி புத்தகம் வழங்கி வரவேற்றார். தொடர்ந்து அவர் அங்கிருந்து மீனவர் தின விழா நடைபெறும் இடத்திற்கு புறப்பட்டு சென்றார்.

விழாவில் கலந்து கொண்ட கவர்னர் ஆர்.என்.ரவி மீனவ சமுதாய சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களையும், மீனவ சமுதாய தலைவர்களின் சேவைகளையும் பாராட்டி விருது வழங்கினார்.

தொடர்ந்து நாட்டுப்படகு மீனவர்களுடன் கலந்துரையாடினார். இதனை முடித்து கொண்டு பிற்பகல் பீச் ரோட்டில் உள்ள தனியார் ஓட்டலில் விசைப்படகு மீனவர்களுடன் கலந்துரையாடினார். இன்று மாலை நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு தூத்துக்குடியில் இருந்து மீண்டும் சென்னை புறப்பட்டு செல்கிறார்.

# பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதாவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் உதயநிதி ஸ்டாலின்



பெருந்துறை, நவ.22

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அடுத்த சரளையில் இன்று காலை தி.மு.க. மூத்த உறுப்பினர்கள் 2,500 பேருக்கு பொற்கிழி வழங்கும் விழா நடைபெற்றது. இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மூத்த நிர்வாகிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவித்தார். விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மண்ணில் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் ஈரோடுக்கு பலமுறை வந்திருக்கிறேன். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பிரசாரம் மேற்கொண்டேன். தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினேன்.

இந்த தேர்தலில் தி.மு.க கூட்டணி கட்சி வேட்பாளரான ஈ.வி.கே.எஸ் இளங்கோவனை 65,000 வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் (மக்கள்) வெற்றி பெற செய்தீர்கள். தமிழகத்தில் பல்வேறு மாவட்டத்திற்கு சென்றாலும் ஈரோடு மாவட்டத்திற்கு வரும் போது பெரியார் பாசறைக்கு செல்வது போன்று உணர்வு ஏற்படுகிறது. கழகத்தை நான்கு மண்டலமாக பிரித்துள்ளோம்.

திருவள்ளுவர், அண்ணா, பெரியார், கலைஞர் எனப்பிரித்துள்ளோம். மதுரையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு மாநாடு நடந்தது. அது என்ன மாநாடு தெரியுமா. புளி சோறு மாநாடு. ஒரு மாநாடு எப்படி நடத்தக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்த மாநாடு இருந்தது. ஆனால் ஒரு மாநாடு எப்படி நடத்த வேண்டும் என்ற எடுத்துக்காட்டாக சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ள திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு அமையும். திமுக எவ்வளவோ தேர்தல் அறிக்கைகளை கூறி நிறைவேற்றி உள்ளது.

அதில் முக்கியமான நான்கு மட்டும் உங்களிடம் கூற ஆசைப்படுகிறேன். 1) மகளிர் இலவச பேருந்து பயணம். 2) அரசு பள்ளியில் படித்து உயர் கல்வி சொல்லும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம். 3) காலை உணவு திட்டம் 4) மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞரின் உரிமை தொகை திட்டம்.

இதில் இரண்டு, மூன்று திட்டமானது தேர்தல் அறிக்கையில் கூறாத திட்டம். கலைஞர் தமிழகத்தில் 5 முறை ஆண்டதும், அதே நேரத்தில் தற்போது தலைவர் மு. க. ஸ்டாலின் ஆண்டு வருவதற்கும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் தான் காரணம். நான் தந்தை பெரியார், அண்ணா ஆகிய இருவரையும் நேரில் பார்த்ததில்லை. அவர்களின் மறு உருவமாக உங்களை (மூத்த உறுப்பினர்கள்) பார்க்கிறேன். 2021 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் எப்படி அதிமுகவை வீட்டுக்கு அனுப்பினார்களோ அதைப்போல் வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜனதாவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இந்திய கூட்டணியால் மட்டுமே இந்தியாவை மாற்ற முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னைபுறநகரில் பலத்த மழை: குடிநீர் ஏரிகளுக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரித்தது

திருவள்ளூர், நவ.22

சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரிகள் உள்ளன. வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்து கடந்த வாரத்தில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பலத்த மழை கொட்டியது. அப்போது குடிநீர் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. பின்னர் மழை இல்லாததால் ஏரிகளுக்கு நீர்வரத்து குறைந்நது.

இந்நிலையில் குமரிக்கடல் மற்றும் தமிழக கடலோர பகுதிகள், அதனை ஒட்டிய தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மீண்டும் பலத்த மழை பெய்து வருகிறது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று மாலை தொடங்கிய மழை விடிய, விடிய நீடித்தது. இன்று காலையும் மழை வெளுத்து வாங்கியது.

இதனால் குடிநீர் ஏரிகளுக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. புழல் ஏரிக்கு இன்று காலை நிலவரப்படி 362 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3300 மில்லியன் கன அடி. இதில் 2726மி.கனஅடி தண்ணீர் உள்ளது. 189 கன அடி தண்ணீர் வெளி யேற்றப்படுகிறது.

சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 1080மி.கன அடி. இதில் 673மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 186 கனஅடி தண்ணீர் வருகிறது.

செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3645மி. கனஅடி. இதில் 3115 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு வரும் 162 கனஅடி தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. ஏரியின் மொத்த உயரமான 24 அடியில் 21.98 அடிக்கு தண்ணீர் உள்ளது. பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவு 3231 மி.கனஅடி. இதில் 1862 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 70 கனஅடி தண்ணீர் வருகிறது.

கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை ஏரியில் மொத்த கொள்ளளவான 500 மி.கனஅடியில் 435 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 10 கனஅடி தண்ணீர் வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், செம்பரம்பாக்கம் உள்ளிட்ட 5 ஏரிகளிலும் மொத்தம் 11757 மி.கனஅடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். இதில் 8811 மி.கனஅடி தண்ணீர் உள்ளது குறிப்பிடத்தக்கது. பொன்னேரி பகுதியில் பெய்த பலத்த மழை காணமாக ரெயில்வே சாலையில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து குளம் போல் காணப்படுகிறது. தட பெரும்பாக்கம் காலனி, துரைசாமி நகர் பகுதியில் தாழ்வான இடங்களில் 50க்கும் மேற்பட்ட வீடுகளை மழைநீர் சூழ்ந்து உள்ளது. நேற்று இரவு முதல் பொன்னேரி மீஞ்சூர் சோழவரம், திருப்பாலைவனம் பழவேற்காடு மணலி புதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

# போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நள்ளிரவு தனிமையில் இருந்த போலீஸ் ஜோடி சிக்கினர்: சஸ்பெண்டு செய்து அதிரடி

மயிலாடுதுறை, நவ.22

மயிலாடுதுறை காவேரி நகர் அடுத்த ஆரோக்கிய நாதபுரம் பகுதியில் மாவட்ட புதிய போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தலைமையின் கீழ் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு, துணை சூப்பிரண்டுகள், இன்ஸ்பெக்டர்கள், போலீசார் மற்றும் அமைச்சு பணியாளர்கள் என 100க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் நள்ளிரவு நேரத்தில் இந்த அலுவலகத்தில் உள்ள ஏ.சி.அறை ஒன்றில் ஒரு ஆண், ஒரு பெண் என போலீஸ் ஜோடி ஒன்று தனிமையில் இருந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து, துணை போலீஸ் சூப்பிரண்டு ஒருவருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில், உடனடியாக அங்கு விரைந்து சென்ற அவர் கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டு இருப்பதை கண்டு கதவை தட்டினார். யாரும் கதவை திறக்கவில்லை.

இதனையடுத்து அவர் பூட்டிய அறைக்கு உள்ளே இருப்பது யார்? நீங்களாக வெளியில் வருகிறீர்களா? அல்லது கதவை உடைத்து உள்ளே வரட்டுமா? என்று கேட்டுள்ளார். இதனை அடுத்து அந்த ஜோடி மெதுவாக கதவை திறந்து வெளியில் வந்தனர்.

அவர்கள் இருவரையும் அக்கோலத்தில் பார்த்த அந்த துணை போலீஸ் சூப்பிரண்டு இருவரையும் அழைத்து விசாரணை நடத்தினார். அதில் அந்த ஆண் போலீஸ்காரர் அதே போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் பணியில் உள்ளவர் என்றும், அந்த பெண் போலீஸ் மாவட்டத்தில் உள்ள ஒரு போலீஸ் நிலையத்தில் பணியில் உள்ளவர் என்றும் இருவரும் திருமணம் ஆகாதவர்கள் என்றும் தெரிய வந்தது. இதுகுறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுக்கு, கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு அறிக்கை அளித்தார். இதனையடுத்து பணியின்போது ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இருவரையும் பணியிடை நீக்கம் (சஸ்பெண்டு) செய்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மீனா உத்தரவிட்டார். இச்சம்பவம் சகபோலீசார் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பாம்பு பிடி மன்னனை 2 முறை கடித்த பாம்பு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை

மேட்டுப்பாளையம், நவ.22

மேட்டுப்பாளையம் சிறுமுகை அருகில் உள்ள திம்மராயம்பாளையத்தை சேர்ந்தவர் காஜாமைதீன் (வயது 43). இவருக்கு மனைவி நெபீஷா, மகள் பாத்திமா ஆகியோர் உள்ளனர்.

திம்மராயம்பாளையம் பள்ளிவாசலில் காஜா மைதீன் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். மேலும் இவர் பாம்பு பிடிக்கும் தொழிலிலும் பகுதிநேரமாக ஈடுபட்டு வந்து உள்ளார்.

இந்த வகையில் அவர் இதுவரை 100க்கும் மேற்பட்ட விஷப்பாம்புகளை பிடித்து பத்திரமாக காட்டுக்குள் விடுவித்து உள்ளார். எனவே காஜா மைதீனை அங்கு உள்ள பொதுமக்கள், பாம்புபிடி மன்னன் என்று மரியாதையுடன் அழைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் சிறுமுகைஅன்னூர் சாலையில் தியேட்டர் அருகே நிறுத்தி வைக்கப்பட்டு உள்ள ஒரு மினி லாரியில் நாகப்பாம்பு புகுந்து உள்ளதாக தீயணைப்பு துறைக்கு தகவல் வந்தது.

தொடர்ந்து அவர்கள் இதுகுறித்து காஜா மைதீனுக்கு தகவல் தெரிவித்து, மினி லாரிக்குள் புகுந்திருக்கும் நாகப்பாம்பை பத்திரமாக பிடித்து ஒப்படைக்கும்படி அறிவுறுத்தினர்.

எனவே காஜாமைதீன் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றார். அங்கு மினி லாரிக்குள் புகுந்து இருந்த நாகப்பாம்மை பிடிக்கும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது அந்த பாம்பு எதிர்பாராதவிதமாக பாய்ந்து வந்து கொத்தியது. இருந்தபோதிலும் காஜாமைதீன் நாகப்பாம்பை பத்திரமாக பிடித்துவிட்டார்.

தொடர்ந்து அவர் வனத்துறையினருடன் சிறுமுகை காட்டுக்குள் சென்றார். அங்கு நாகப்பாம்பு பத்திரமாக விடுவிக்கப்பட்டது. இந்த நிலையில் அந்த பாம்பு மீண்டும் காஜா மைதீனை 2வது முறையாக பாய்ந்து வந்து கடித்துவிட்டு அடர்ந்த காட்டுக்குள் தப்பி சென்றது.

நாகப்பாம்பு 2 முறை கொத்தியதால் காஜாமை தீன் மிகுந்த வலியில் அலறியபடி மயங்கி விழுந்தார். தொடர்ந்து அவரை வனத்துறையினர் மீட்டு மேட்டுப்பாளையம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் காஜாமைதீன் மேல்சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதற்கிடையே நாகப்பாம்பு கொத்தியதில் படுகாயம் அடைந்த காஜாமை தீன் குடும்பத்துக்கு தனியார் ஆஸ்பத்திரியில் உயர்தர சிகிச்சைகள் அளிக்க வேண்டும், மேலும் அவருக்கு தமிழக அரசு சார்பில் உரிய நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் என சமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# திருமண கோலத்தில் மாட்டு வண்டியில் ஊர்வலமாகச் சென்ற புதுமண தம்பதி



குனியமுத்தூர்:, நவ.22

தமிழ் கலாசாரத்தை தலைநிமிர செய்யும் வகையில் கோவை மாவட்டம் போத்தனூர் அருகே செட்டிபாளையம் பகுதியில் ஒரு ருசிகர சம்பவம் நடந்து உள்ளது. அங்கு புதிதாக திருமணமான புதுமண தம்பதி மாட்டு வண்டியில் புகுந்த வீட்டுக்கு சென்று அசத்தி உள்ளனர். இதுதொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

கோவை செட்டிபாளையம் பகுதியை சேர்ந்த முருகேசன் பாக்கி யலட்சுமி தம்பதியின் மகன் ஆனந்தகுமார். இவருக்கும் மெட்டுவாவி பகுதியை சேர்ந்த மகாலிங்கம் சரோஜினி தம்பதியின் மகள் பவதாரணிக்கும் செட்டிபாளையம் செல்லாண்டியம்மன் கோவிலில் திருமணம் நடந்தது.

திருமணம் முடிந்ததும் மணமக்கள் ஆனந்தகுமார் பவதாரணி ஆகியோர் தமிழ் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் புகுந்த வீட்டுக்கு மாட்டு வண்டியில் செல்வதென முடிவு செய்தனர். தொடர்ந்து அங்கு அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டி வரவழைக்கப்பட்டது. அதில் மணமக்கள் ஏறி அமர்ந்தனர். தொடர்ந்து மணமகன் ஆனந்தகுமார் மாட்டு வண்டியை ஓட்டினார். பக்கத்தில் அமர்ந்து இருந்த மணமகள் பவதாரணி மகிழ்ச்சியில் கைகளை அசைத்தபடி வந்தார்.

செட்டிபாளையம் சாலையில் மாட்டுவண்டியில் திருமண ஊர்வலம் சென்ற மணமக்களை நேரில் பார்த்து பொதுமக்கள் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். தொடர்ந்து அவர்கள் வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்தனர்.

இதற்கிடையே சமூகவலைதளத்தில் மணமக்கள் மாட்டுவண்டியில் திருமண ஊர்வலம் சென்ற காட்சியை ஒருசிலர் சமூக வலைதளத்தில் பகிர்ந்தனர். அது இணையதளங்களில் கடந்த 2 நாட்களாக வைரலாக பரவி வருகிறது.

இதுகுறித்து மணமகன் ஆனந்தகுமார் கூறியதாவது:

நான் பி.இ. சிவில் என்ஜினீயரிங் முடித்து உள்ளேன். பவதாரணி எம்.எஸ்.சி ஐ.டி முடித்து உள்ளார். எங்களின் குடும்பம் பரம்பரையாக விவசாயத்தை தொழிலாக கொண்டது. எனவே விவசாயம் என்பது எங்களின் கனவு மட்டுமல்ல. உணர்வுடன் ஒருங்கிணைந்தது.

நாங்கள் எளிமைக்காக மட்டுமின்றி உரிமைக்காகவும் மாட்டுவண்டியை தேர்வு செய்து உள்ளோம். என்னதான் நாம் இன்றைக்கு மாடர்ன் உலகில் வாழ்ந்து வந்தாலும், விவசாயம் இல்லை என்றால் உயிர் வாழ முடியாது.

மேலும் எந்த நாட்டில் விவசாயம் தோல்வி அடைகிறதோ, அங்கு அனைத்து துறைகளும் படுதோல்வியை சந்தித்து பரிதாப நிலைக்கு தள்ளப்படும். இளைய தலைமுறையினர் தமிழ் கலாசாரத்தை பின்பற்றி, விவசாயத்தை ஊக்குவித்தால் மட்டும் போதும். நம் நாடு நிச்சயமாக வல்லரசாக மாறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வண்டியில மாமன் பொண்ணு, ஓட்டுறவன் செல்லக்கண்ணு என ஒரு சினிமா பாடல் உண்டு. புது தம்பதி மாட்டு வண்டியில் செல்லும் காட்சி அந்த பாடலை நினைவுப்படுத்தும் விதமாக உள்ளது.

# 5 தலைமுறை கண்ட 104 வயது மூதாட்டி மரணம்: அதிர்ச்சியில் 102 வயது தம்பி பலி

முத்தூர்:, நவ.22

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே பரஞ்சேர்வழியில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு சாவடிப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் கே. முரளி தலைமை தாங்கினார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

1996ம் ஆண்டு 4வது முறையாக தமிழக முதல்வராக கலைஞர் பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார். இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருத்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல், கிராமப்புறங்களுக்கும் நேரில் சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடியாதவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நோயை ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தைகள் மருத்துவர் உள்ளிட்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க, இது சிறந்த திட்டமாக உள்ளது. இன்று பரஞ்சேர்வழி ஊராட்சியில் நடைபெற்ற ஒரு இந்த மருத்துவ முகாமில் பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்று நோயற்ற வாழ்வு வாழ வேண்டும். என்றார்.

முகாமில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பொதுவான நோய்கள், இருதய நோய், சர்க்கரை நோய், பல் மருத்துவம், காது மூக்கு தொண்டை தொடர்பான நோய், கண் பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை, குழந்தைகளுக்கான மருத்துவம், தோல் நோய் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு முகாம் மூலம் 480 பேருக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். மேலும் வட்டார சுகாதார ஆய்வாளர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், சமுதாய சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மக்களைத் தேடி மருத்துவம் திட்டப் பணியாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறை சார்ந்த 80க்கும் மேற்பட்ட ஊழியர்கள், பணியாளர்கள் பங்கேற்று பணிபுரிந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், சுகாதார பணிகள் துணை இயக்குநர் ஜெகதீஷ்குமார், காங்கயம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் டி. மகேஷ்குமார், நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் குணபிரசாத் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 22.11.2023



## அப்போ மிஸ் பண்ணவங்க, இப்போ மிஸ் பண்ணிடாதீங்க.. சித்தா படத்தின் புது அப்டேட்

நடிகர் சித்தார்த் நடிப்பில் கடந்த செப்டம்பர் மாதம் வெளியான திரைப்படம் சித்தா. பண்ணையாரும் பத்மினியும், சேதுபதி உள்ளிட்ட படங்களை இயக்கிய அருண்குமார் இந்த படத்தை இயக்கி இருந்தார். இடாகி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்த இந்த படத்திற்கு திபு தாமஸ் இசையமைத்து இருந்தார்.

இந்த படத்திற்கு விமர்சன ரீதியில் நல்ல வரவேற்பு கிடைத்ததோடு, பிரபலங்கள் பலரும் இந்த படத்திற்கு வாழ்த்து தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில், சித்தா படத்தின் ஓ.டி.டி. ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு தற்போது வெளியிடப்பட்டு இருக்கிறது.

அதன்படி சித்தா திரைப்படம் டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓ.டி.டி. தளத்தில் நவம்பர் 28ம் தேதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் இதற்கான போஸ்டரும் வெளியிடப்பட்டு இருக்கிறது.



## புதிய படத்தில் நடிக்கும் பிக்பாஸ் சிபி

கிரவுன் பிக்சர்ஸ் எஸ்.எம். இப்ராகிம் தயாரிப்பில் உருவாகும் புதிய படத்தை அறிமுக இயக்குனர் பிரகாஷ் கிருஷ்ணன் இயக்க இருக்கிறார்.

வஞ்சகர் உலகம், மாஸ்டர் போன்ற படங்களில் நடித்த சிபி இந்த படத்தில் நாயகனாக நடிக்கிறார். இவருடன் குஷிதா கல்லப்பு, பருத்திவீரன் சரவணன், ஜெயபிரகாஷ் மற்றும் நிரோஷா ஆகியோர் இந்த படத்தின் முன்னணி கதாபாத்திரங்களாக நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு ஜீவி பட வசனகர்த்தா பாபு தமிழ் வசனம் எழுத, ஒளிப்பதிவு கோபி கிருஷ்ணன், படத்தொகுப்பு பிரதீப், இசையமைப்பாளர் கேபர் வாசுகி மேற்கொண்டுள்ளனர். இன்னும் பெயரிடப்படாத இந்த படத்தின் படப்பிடிப்பு நேற்று (நவம்பர் 20) சென்னையில் துவங்கியது.




## ஷாரிக் ஹாசன், அம்மு அபிராமி நடிப்பில் ரிலீசுக்கு தயாராகும் ஜிகிரி தோஸ்த்

இந்திய சினிமாவின் முன்னணி இயக்குனர் ஷங்கரின் முன்னாள் உதவி இயக்குனரும், பல விருதுகளை வென்ற குறும்படங்களை இயக்கியவருமான அறன் தமிழ் சினிமாவில் இயக்குனராக களமிறங்குகிறார். கே.பிரதீப் உடன் சேர்ந்து இப்படத்தை தயாரிப்பதுடன் படத்தின் முக்கியமான கதாபாத்திரத்திலும் நடிக்கிறார் அறன். ஜிகிரி தோஸ்த் என்ற தலைப்பில் உருவாகி இருக்கும் இந்த படத்தை எஸ்.பி.அர்ஜூன் மற்றும் ஹக்கா ஜெ இணைந்து தயாரித்துள்ளனர்.

அறன் மட்டுமின்றி பிக் பாஸ்இல் புகழ் பெற்ற ஷாரிக் ஹாசன், அம்மு அபிராமி ஆகியோரும் இந்த படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் வி.ஜே.ஆஷிக், பவித்ர லக்ஷ்மி, அனுபமா குமார், கௌதம் சுந்தரராஜன், சிவம், ஜாங்கிரி மதுமிதா, லேட் ஆர்.என்.ஆர். மனோகர், சரத், பப்ளிக் ஸ்டார் துரை சுதாகர் ஆகியோரும் முன்னணி கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர்.

படத்தை அறன் எழுதி, இயக்க, அஸ்வின் விநாயகமூர்த்தி இசையமைக்கிறார். படத்தொகுப்பு பணிகளை அருள் மொழி வர்மன், ஒளிப்பதிவு ஆர்.வி. சரண், சண்டை பயிற்சி மகேஷ் மேத்யூ, நடனம் தினா, ஆடியோகிராஃபி பணிகளை சரவண குமார், டி.ஐ. மற்றும் சி.ஜி. பணிகளை ஏ.கே. பிரசாத் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். இந்த படத்தின் பாடல்களை சுதன் பாலா எழுதியிருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது பின்னணி வேலைகள் நடைபெற்று வருகிறது. டிசம்பர் மாதம் இப்படத்தை வெளியிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.



## நான் மன்னிப்பு கேட்கக்கூடியவனா? எரிமலை குமுறினால்... மன்சூர் அலிகான்

லியோ படத்தில் நடித்தது குறித்து பேசிய மன்சூர் அலிகான் திரிஷா குறித்து மிகவும் சர்ச்சனையான கருத்துக்களை கூறினார். மன்சூர் அலிகானின் இந்த கருத்துக்கு கண்டனங்கள் வலுத்து வருகிறது. நடிகைகள் திரிஷா, மாளவிகா மோகனன், பாடகி சின்மயி, இயக்குநர் லோகேஷ் கனகராஜ், கார்த்திக் சுப்பராஜ் உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தென்னிந்திய நடிகர் சங்கமும் கண்டனம் தெரிவித்தது.

இதுகுறித்து தென்னிந்திய நடிகர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், சக நடிகர்களைப் பற்றி நகைச்சுவை என்ற பெயரில் தரக்குறைவாக பேசிய மன்சூர் அலிகானை தென்னிந்தியா நடிகர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. எந்த ஊடகம் முன்பு அவர் பேசினாரோ அந்த ஊடகம் முன்பு உண்மை மனதுடன் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டுகிறோம்.

மேலும் தன் தவறு உணர்ந்து, மனம் வருந்தி, உண்மையாக பொது மன்னிப்பு கூறும் வரை அவரை சங்கத்திலிருந்து ஏன் தற்காலிகமாக நீக்கம் செய்யக்கூடாது என கூறியிருந்தது.

இந்நிலையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த மன்சூர் அலிகான், திரிஷாவை நான் பாராட்டி பேசியதற்காக அவர் எனக்கு நன்றிதான் சொல்ல வேண்டும். திரிஷா குறித்து நான் தவறாக பேசவே இல்லை.நான்மன்னிப்புகேட்கக்கூடியவனா?எரிமலை குமுறினால் எல்லோரும் ஓடிப்போய் விடுவீர்கள். நடிகர் சங்கம் இமாலய தவறை செய்துள்ளது. கண்டன அறிக்கையை நடிகர் சங்கம் வாபஸ் பெற வேண்டும். என்னை கருப்பு ஆடாக காட்டி விட்டு நடிகர் சங்கம் நல்ல பேர் எடுக்க முயற்சி செய்கிறது என கூறினார்.




## 8 லட்சம் பார்வையாளர்களை கவர்ந்த திஷா பதானி தோற்றம்

கிரிக்கெட் வீரர் எம்.எஸ்.தோனியின் வாழ்க்கை வரலாற்றை கொண்டு உருவான படம் எம்.எஸ். தோனிதி அன்டோல்ட் ஸ்டோரி. இந்த படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் திஷா பதானி. தொடர்ந்து இந்தி திரையுலகில் பல படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக திகழ்ந்து வருகிறார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில், சூர்யா நடிப்பில் உருவாகும் 'கங்குவா' படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார் திஷா பதானி. கமல், அமிதாப் பச்சன், பிரபாஸ் நடிக்கும் கல்கி 2829 ஏடி படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

கியூன் கரு பிக்சர் கேர்ஸ் ஆன் தம் 23 என்ற இசை ஆல்பத்தையும் இயக்கியுள்ளார். சினிமா நடிப்பு மட்டுமின்றி உடல் தகுதி விஷயத்திலும் அக்கறை கொண்டவர் திஷா பதானி. உடலை கட்டுக்கோப்பாக வைத்து கொள்ள தீவிர உடற்பயிற்சி என தனியாக நேரத்தை ஒதுக்கி பயிற்சி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இது மட்டுமின்றி இன்ஸ்டாகிராமில் அதிக ஆர்வம் கொண்ட திஷா பதானி, தனது புகைப்படங்கள், வீடியோக்களை அடிக்கடி வலைதளங்களில் பகிர்ந்து வருகிறார். அந்த வகையில் தற்போது வெண்ணிற ஆடையில்கவர்ச்சியாகஉடையணிந்து புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்களுக்கு 8 லட்சம் பார்வையாளர்கள் லைக்குகளையும் கொடுத்து வருகின்றனர்.

## தமிழ் திரையுலகம் சார்பில் டிசம்பர் 24ந்தேதி கலைஞர் நூற்றாண்டு விழா: ரஜினி, கமல் பங்கேற்கிறார்கள்

தமிழ் திரையுலகம் சார்பில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டையொட்டி பிரமாண்ட விழா சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் வருகிற டிசம்பர் மாதம் 24ந்தேதி நடைபெற உள்ளது.

இதையொட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் இன்று காலை பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது.

நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் சங்க தலைவர் ராமசாமி, செயலாளர் ராதாகிருஷ்ணன், பொருளாளர் சந்திர பிரகாஷ், கலைப்புலி எஸ்.தாணு, ஆர்.கே.செல்வமணி, கே.ராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிர்வாகிகள் அளித்த பேட்டியில் கூறியதாவது:

திரையுலகின் மற்ற சங்கங்களுடன் இணைந்து தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைமையில், கலைஞர் ஆற்றிய மகத்தான சாதனைகளை அவரது நூற்றாண்டில் கலைஞர் 100 எனும் மிக பிரம்மாண்டமான விழாவாக அடுத்த மாதம் 24ந்தேதி (ஞாயிறு) அன்று சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

அகில இந்திய அளவில் தெலுங்கு, கன்னடம், பெங்காலி, மலையாளம், இந்தி, மராத்தி, ஒரியா, குஜராத்தி என பல மொழி திரைப்பட கலைஞர்களை இந்த விழாவில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க உள்ளோம்.

கலைஞர் வசனம் எழுதிய படங்களில் இருந்து பல்வேறு காட்சிகள் நேரடியாக நடித்து காட்ட திரைப்பட நட்சத்திரங்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த மாபெரும் விழாவில் முதல்கட்டமாக கமல்ஹாசன், ரஜினிகாந்த், இளையராஜா கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இந்த விழாவில் தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நட்சத்திரங்கள், விஜய், அஜித், இயக்குனர்கள், இசையமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம்.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் குறைந்தபட்சம் 35,000 பேர் இந்த விழாவினை அமர்ந்து பார்க்கும் வண்ணம் மேடை அமைக்கப்பட உள்ளது.

இந்த மாபெரும் விழாவில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது.

நடனம், நாடகம், இசைக்கச்சேரி, ஒலி, ஒளி காட்சிகள், டிரோன்கள் படையெடுப்பில் கண்கவர் நிகழ்ச்சிகள் மேலும் பல வித்தியாசமான நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவரும் வண்ணம் உருவாக்கி வருகிறோம்.

இந்த விழாவினை திரை நட்சத்திரங்களும், திரைக்கலைஞர்களும் பங்கெடுத்து சிறப்பிக்க இருப்பதால் அடுத்த மாதம் (டிசம்பர்) 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு முழுவதும் படப்பிடிப்புகள் உட்பட திரை உலக வேலைகள் எதுவும் நடைபெறாது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



## 1.25 மில்லியன் ரசிகர்கள்: சாதனை படைத்த உலகக் கோப்பை தொடர்

இந்தியாவில் சமீபத்தில் நடந்த 50 ஓவர் உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியை வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி 6வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

கடந்த அக்டோபர் 5ம் தேதி தொடங்கி 7 வார காலமாக நடந்த இந்த கிரிக்கெட் திருவிழா கடந்த 19ம் தேதியுடன் நிறைவு பெற்றது. இதில் ஆஸ்திரேலிய அணி உலகக் கோப்பையை கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில் , இந்த உலகக் கோப்பை தொடர் முழுவதையும் 1.25 மில்லியன் ரசிகர்கள் நேரில் கண்டுகளித்துள்ளனர் என ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.



45 நாட்கள் நடந்த இந்த தொடரை கிட்டத்தட்ட 12,50,307 ரசிகர்கள் மைதானத்துக்கு வந்து நேரில் கண்டுகளித்துள்ளனர். இது உலகசாதனையாக மாறியுள்ளது.

கடந்த 2015ல் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடந்த உலகக் கோப்பை தொடரை 1.016 மில்லியன் ரசிகர்கள் நேரில் பார்த்ததே சாதனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




## இப்படி 3 முறை நடந்துச்சுனா எதிர் அணிக்கு 5 ரன்கள் ஐசிசி அதிரடி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இன்று வெளியிட்ட புதிய அறிவிப்பின்படி, ஆண்கள் ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் ஓவர்களுக்கு இடையில் ஸ்டாப் கடிகாரங்கள் பயன்படுத்தப்படும். ஸ்டாப் கடிகாரங்களின் அறிமுகம் தற்போது சோதனை அடிப்படையில் டிசம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை ஓவர்களுக்கு இடையில் எடுக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்தும்.

புதிய விதிமுறைப்படி முந்தைய ஓவர் முடிந்து 60 வினாடிகளுக்குள் பந்துவீச்சு அணி அடுத்த ஓவரை வீசத் தயாராக வேண்டும். அப்படி தயாராகத பட்சத்தில், ஒரு இன்னிங்சில் இதேபோல் மூன்றாவது முறை நிகழும்போது 5 ரன்கள் பந்து வீச்சு அணிக்கு அபராதம் விதிக்கப்படும் என்ற புதிய விதியை ஐசிசி அறிவித்துள்ளது.






## மாரத்தான் போட்டி.. என்ன இவ்வளவு தூரமா இருக்கு? காரில் வந்து பரிசை வென்ற வீரர் மீது நடவடிக்கை

பிரிட்டனில் நடைபெற்ற மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் நண்பரின் காரை பயன்படுத்தியதை ஒப்புக்கொண்ட வீரருக்கு தடை விதிக்கப்பட்ட சம்பவம் அரங்கேறி இருக்கிறது. கடந்த ஏப்ரல் 7ம் தேதி நடைபெற்ற 50 மைல் மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் ஜோசியா சக்ரெவ்ஸ்கி கலந்து கொண்டு மூன்றாவது இடத்தை பிடித்தார்.

இந்த நிலையில், பந்தயத்தின் போது அவர் தனது நண்பரின் காரில் சிறிது தூரம் கடந்து வந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். ஓட்டப்பந்தயத்தின் போது தனக்கு காயம் ஏற்பட்டதால், காவலர்களிடம் தகவல் தெரிவித்த பிறகே இவ்வாறு செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஓட்டப்பந்தயத்தின் போது காரில் பயணித்து வெற்றி பெற்றதற்காக இவர் ஓட்டப் பந்தயங்களில் பங்கேற்க 12 மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கான உத்தரவை பிரிட்டனை சேர்ந்த விளையாட்டு ஒழுங்குமுறை கூட்டமைப்பு பிறப்பித்து இருக்கிறது. ஓட்டப் பந்தயத்தின் போது காரில் வந்து பரிசு பெற்ற சம்பவம் சமூக வலைதளங்களில் பேசுபொருளாகி இருக்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.